உ

# பரிசளிப்பு விழாவும்

## நிறுவுனர் நினைவு நாளும் 2009

ஆனி 29 திங்கட்கிழமை முப 10.00

# அதிபர் அறிக்கை

பிரதம விருந்தினர்

**திருமதி. ச. சொக்கலிங்கம்**

(ஓய்வு பெற்ற பிரதி அதிபர்).

(யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை)

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

யாழ்ப்பாணம்.

J/Vembadi Girls' High School
LIBRARY
Acc. No.
Class No.
Date

## PRIZE DAY & Founder's Day 2009

**(June 29 th Monday 10.00 am)**

# Principal's Report

*Chief Guest*

**MRS. SANTHIRADEVI SOCKALINGAM**

*(Vembadi Girls' High School, Jaffna.*

## நிகழ்வுகள்

| | | |
|---|---|---|
| மங்கல விளக்கேற்றல் | | |
| கடவுள் வாழ்த்து | | |
| வரவேற்புப் பாடல் | - | மாணவிகள் |
| ஆசியுரை | - | வணக்கத்துக்குரிய குரு<br>முதல்வர் |
| | | திரு. S. கதிர்காமர் |
| பரிசுத்தின அறிக்கை | - | அதிபர் |
| பரிசுத்தின உரை | - | பிரதம விருந்தினர் |
| நிறுவுனர் நினைவுரை | - | செல்வி.இ.இராஜரட்ணம் |
| பேச்சு (தமிழ்) | - | லோஜனா கணபதிப்பிள்ளை |
| பேச்சு (ஆங்கிலம்) | - | தாட்சாயனி தியாகராஜா |
| பரிசு வழங்கல் | - | பிரதம விருந்தினர் |
| நன்றியுரை | | |
| முன்மொழிபவர் | - | செயலாளர் பாடசாலை |
| அபிவிருத்திச் சங்கம் | | |
| வழிமொழிபவர் | - | சிரேஷ்ட மாணவத் தலைவி |
| கல்லூரிக் கீதம் | | |

# யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை
## பரிசளிப்பு விழா 2009
## வரவேற்புப் பாடல்

### பல்லவி

இராகம் - ஹம்சத்வனி
தாளம் - ஆதி

வருக வருக பல் சான்றோரே – நாம்
இருகரம் கூப்பி வரவேற்கின்றோம்

### அனுபல்லவி

ஞானமும் மேன்மையும் நன்மையும் செல்வமும்
அன்பும் அறனும் அவனியில் நிறைந்திட
(வருக)

### சரணம் I

வித்தை பலவும் தந்து விதவிதமாய் ஒளிரும்
எத்திசையும் புகழ் மணக்கும் வேம்படியாளில்
முத்தொளிர் முறுவலுடன் கதிரும் மதியும் போல
சித்தம் வைத்து சிறப்புடன் வருகை தந்தீர்
(வருக)

### சரணம் II

இராகம் - வலஜி

பண்ணிய முயற்சி எல்லாம் பயனுற விளங்க
எண்ணிய எண்ணம் எல்லாம் வெற்றியில் திகழ
கண்ணிலே கருணைமின்ன கருத்திலே திண்மையுடன்
மண்ணிலே பணிபுரிந்து மகிழ்வெய்தும் சந்திராவே
(வருக)

J/Vembadi Girls' High School
LIBRARY
Acc.No: M.139
Class No:
Date:

## சரணம் III

**இராகம் - பெஹாக்**

கல்வியே தொழிலாக வேம்படியே களமாக
சொல்லிலே இங்கிதமாய் சிரித்துப் பேசும் அம்மையே
எல்லையிலா சேவை செய்தீர் நும்மதியுடன் இணைந்து
பல்வள நிறைவால் பல்லாண்டு வாழ்கவே

(வருக)

## சரணம் III

**இராகம் - மத்தியமாவதி**

கலைநிறை பள்ளி வளர்ச்சியில் பங்கேற்கும்
பெரியோர்களே! அதிபர் ஆசான்களே!
நிறையுற விளங்கும் வேம்படியைப் போற்றும்பழைய மாணவரே!
பெற்றோரே! மற்றோரே

(வருக)

M - 239

# அதிபர் அறிக்கை 2009

பேரன்புக்கும், பெருமதிப்புக்குமுரிய
பிரதமவிருந்தினர்களே!
வணக்கத்திற்குரிய மெதடிஸ்ற் திருச்சபை குரு
முதல்வர் அவர்களே!
பழையமாணவர் சங்கத் தலைவர் அவர்களே!
பாடசாலை அபிவிருத்தி சங்கச் செயலாளர்
அவர்களே!
அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களே!
கல்வித்திணைக்கள அதிகாரிகளே!
அயற்பாடசாலை அதிபர்களே!
அன்பான பெற்றோர்களே!
பழைய மாணவர்களே!
நலன் விரும்பிகளே!
எமது பாடசாலை ஆசிரியர்களே!
மாணவர்களே!

உங்கள் அனைவருக்கும் என் உள்ளம் நிறைந்த அன்பு வணக்கத்தைக் கூறி அனைவரையும் வருக வருக என வரவேற்பதுடன் எமது பாடசாலையின் 2008 ஆம் ஆண்டிற்குரிய பரிசுத்தினத்தின அதிபர் அறிக்கையை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

எமது பாடசாலையின் நிறுவுனர்தினம் 29ஆம் திகதியை நாம் பாடசாலை பரிசுத்தினத்துடன் இணைந்து இன்று நினைவு கூருகின்றோம். எமது விழாவைச் சிறப்பித்து எம்மை மகிழ்விக்க வீற்றிருக்கும் முதன்மை விருந்தினரான எமது பாடசாலை

பழைய மாணவியும் முன்னைநாள் பிரதி அதிபருமான திருமதி. ச. சொக்கலிங்கம் அவர்களை வரவேற்பதில் எமது பாடசாலைச் சமூகம் பெருமகிழ்வடைகின்றது.

விஞ்ஞானப் பயிற்சி ஆசிரியரான இவர் தன் ஆரம்பக் கல்வியை தரம் 3 தொடக்கம் க.பொ.த உயர்தரம் வரை எமது பாடசாலையில் 1955 இலிருந்து 1965 வரை தொடர்ந்தார். விஞ்ஞானப் பாடத்தின் ஆர்வம் காரணமாக விஞ்ஞானத் துறையில் க.பொ.த உயர்தரத்தை மேற்கொண்டார்.

இவரது கணவர் இலங்கைப் போக்குவரத்துச் சபையில் பொதுமுகாமையாளராகக் கடமை ஆற்றினார். இவர் எமது பிரதமவிருந்தினரின் ஆசிரிய சேவையில் உற்ற துணையாயிருந்தார் எனின் மிகையாகாது.

தனது ஆசிரிய சேவையின் முதலாவது நியமனத்தை 01.02.1972 இல் பெற்றார். தனது ஆசிரியப் பணியில் பருத்தித்துறை மெதடிஸ்ற் கல்லூரியிலும் , நாவலர் மகாவித்தியாலயத்திலும் , கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் , புத்தூர் சிறீபஞ்சசீய வித்தியாலயத்திலும் , நல்லூர் C.C.T.M.S பாடசாலையிலும் மேற்கொண்டுள்ளார். 1975 – 1976 ல் பலாலி ஆசிரிய விஞ்ஞானப் பயிற்சிக்கலாசாலையில் பயிற்சி நெறியைத் தொடர்ந்தார்.

எமது பாடசாலையில் 07.02.1979 ல் ஆசிரியராகக் கடமையேற்றார். எமது பாடசாலையின் பழைய மாணவியுமாக இருந்தமை எமது கல்லூரியின் கல்விச் செயற்பாடுகளுக்கு உந்து சக்தியாக இருந்தது. தரம் 6 – 7ன் பகுதித் தலைவராக இருந்து பின்னர் 2000 ஆண்டில் இணைப்பாடவிதானங்களுக்குப் பொறுப்பான பிரதி அதிபராக கடமையேற்றார்.

மலர்ந்த முகமும் புன்னகையும் கனிவுடன் பழகும் பண்பும் கொண்டவர். எமது கல்விச் செயற்பாடுகளிலும் விளையாட்டுப் போட்டிகளிலும் ஏனைய விழாக்களிலும் தனது பூரண ஒத்துழைப்பை வழங்கியவர். குறிப்பிட்டுக் கூறக்கூடியதாக எமது மாணவர்களுக்கு நாட்டிய நாடக நடனப் போட்டிகளிலும் , விழாக்களிலும் பாத்திர ஒப்பனைகளைச் செய்து வெற்றியீட்ட வழிவகுத்தவர்.

அத்துடன் கல்வி நிர்வாகச் செயற்பாடுகள் பாடசாலை அனுமதி, புலமைப்பரிசில் இணைப்பாட விதானச் செயற்பாடுகள் யாவற்றிலும் ஒத்துழைப்பு நல்கியவர். எமது கல்லூரி வளர்ச்சியில் 30 வருடங்கள் அர்ப்பணிப்பான சேவையை வழங்கியிருந்தார். இத்தகு சிறப்புக்கள் காரணமாக எமது பரிசளிப்பு விழாவிற்கு முதன்மை விருந்தினராக அழைத்து கௌரவிப்பதில் எமது பாடசாலைச் சமூகம் பெருமையும் , பெருமகிழ்வும் அடைகின்றது. அவரது வாழ்வு வளம் பெற வாழ்த்துகின்றேன்.

யாழ் வலயத்தில் தன்னிகரில்லாப் பெருமையுடன் தலைநிமிர்ந்து கம்பீரமாகக் காட்சி தரும் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையின் நிறுவுனர் “கலாநிதி பேர்சிவல் அடிகளார்” அவர்களை வேம்படி அன்னையின் அனைத்து குழந்தைகளும் பெரும் நன்றியுடன் நினைவு கூர்ந்து தலை வணங்குகின்றனர்.அவர்களின் நினைவு எமது கல்லூரியின் பெருமையுடன் பிணைந்து என்றும் அனைவரது மனதிலும் பசுமையாக நிலைத்திருக்கும் என வாழ்த்தி பரிசுத்தின அறிக்கையைச் சமர்ப்பிக்க முன் வருகிறேன்.

## அதிபர் அறிக்கை – 2008

இவ்வாண்டிலும் எமது பாடசாலையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் எவ்வித பிரச்சனைகளுமின்றி பாதிக்கப்படாமல் தீவிர முயற்சியுடன் செயல்திறன் மிக்கதாக அமைந்தது.

## மாணவர் தொகை – 2008

| | |
|---|---|
| 6 – 11 வரை | 1258 |
| 12 – 13 வரை | 822 |
| மொத்தம் | 2080 |

## ஆசிரியர் விபரம்

| | |
|---|---|
| விஞ்ஞான கணித பட்டதாரிகள் | 20 |
| கலைப்பட்டதாரிகள் | 20 |
| வர்த்தகப் பட்டதாரிகள் | 06 |
| மனையியல் | 01 |
| விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் | 46 |

## 2008 இல் புதிதாக எம்முடன் இணைந்தவர்கள்

திருமதி வா. இளங்குமரன்

திரு. யோ. மகிழ்னன்

செல்வி.ஹே. தேவராஜன்

திருமதி. கி. சிவயோகன்

எமது பாடசாலைச் சமூகத்துடன் இணைந்து செயற்பட வருகை தந்திருக்கும் அனைவரையும் வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இவர்கள் அனைவரும் எமது நிறுவனத்தின் சகலவிதமான செயற்பாடுகளிலும் பங்கு கொண்டு தமது பூரண ஒத்துழைப்பை வழங்கித் திறம்படச் செயலாற்ற வேண்டுகின்றேன்.

## 2008 இல் எம்மிடம் இருந்து விலகிச் சென்றோரா்.

திருமதி. ஜெ. டெனிசியஸ்

செல்வி. அ.குணரட்ணம்

திரு.மா.சிவபாலன்

செல்வி. தே.பொன்னுத்துரை

திருமதி. கௌ. சுந்தரலிங்கம்

திருமதி.ச. சொக்கலிங்கம்

செல்வி. கௌ. சச்சிதானந்தன்

இவர்களுள் திருமதி ச. சொக்கலிங்கம், திருமதி கௌ.சுந்தரலிங்கம் என்போர் நீண்ட காலம் பாடசாலையில் ஆசரியர்களாக, பகுதித்தலைவர்களாக இறுதியில் பிரதி அதிபர்களாகக் கடமையாற்றி ஒய்வு பெற்றார்கள். பாடசாலை வளர்ச்சியில் பெரும் பங்களிப்பு வழங்கிய இவர்களது ஓய்வுக் காலம் ஒளிமயமானதாக அமைய வாழ்த்துகின்றேன். ஏனையவர்கள் சொந்தவிருப்பின்பேரில் ஏனைய பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்று சென்றனர்.

## பொதுப்பரீட்சைப் பெறுபேறுகள்

| | 2007 | 2008 |
|---|---|---|
| கா.பொ.த சாதாரணம் தோற்றியோர் | 219 | 194 |
| உயர்தரம் தகுதி பெற்றோர் | 219 | 193 |

## விசேட சித்தி

| 2007 | | 2008 | |
|---|---|---|---|
| 10A | 22 | 9A | 11 |
| 9A | 56 | 8A | 31 |
| 8A | 36 | 7A | 23 |
| 7A | 26 | | |

## க.பொ.த உயர்தரம் - 2007

| பாடப்பிரிவு | தோற்றியோர் | சித்தியடைந்தோர் | வீதம் |
|---|---|---|---|
| விஞ்ஞானம் | 162 | 98 | 60.37 |
| கணிதம் | 64 | 40 | 62.5 |
| வர்த்தகம் | 43 | 42 | 97.67 |
| கலை | 89 | 77 | 86.52 |

## க.பொ.த உயர்தரம் - 2008

| பாடப்பிரிவு | தோற்றியோர் | சித்தியடைந்தோர் | வீதம் |
|---|---|---|---|
| விஞ்ஞானம் | 197 | 135 | 68.52 |
| கணிதம் | 71 | 42 | 58.1 |
| வர்த்தகம் | 36 | 35 | 97.3 |
| கலை | 91 | 76 | 82.6 |

## க.பொ.த உயர்தரப்பரீட்சையில் 3A பெற்ற மாணவர்கள்

| மாணவர்கள் | மாவட்டமட்டத்தில் |
|---|---|
| 1. வர்த்தகம் | |
| வானதி கந்தசாமி | 14 |
| அச்சுதா திருஞானசம்மந்தர் | 26 |
| மேனுகா ராஜேந்திரம் | 34 |
| 2. <u>கலை</u> | |
| குயிந்தினி ஞானசேகரம் | 5 |
| கமலாஜினி கேதாரநாதன் | 16 |
| சாளிலினி ஜெயபாலச்சந்திரன் | 31 |
| யாழினி சிவராஜா | 42 |
| துசிதா கமலநாதன் | 103 |
| பிரியதர்சினி ராஜேந்திரன் | 159 |
| சிவை கயேந்திரன் | 220 |
| பிரியதர்சினி காந்தி | 315 |

## 2008 இல் முகாமைத்துவக் குழு

| | |
|---|---|
| அதிபர் - | திருமதி.க. பொன்னம்பலம் |
| பிரதி அதிபர் | திருமதி.ச.சொக்கலிங்கம் |
| உப அதிபர் | திருமதி.கௌ.சுந்தரலிங்கம் |
| பகுதித்தலைவர்கள் | திருமதி.சி. ஜெயபாலன் |
| | செல்வி. த. புண்ணியமூர்த்தி |
| | திருமதி. வி. புஸ்பநாதன் |
| | திருமதி. பா. உதயகுமார் |
| | திருமதி க. கருணாநிதி |

எமது பாடசாலையின் சகல நிர்வாகக் கடமைகள், கற்றல், கற்பித்தல், இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் பாடசாலையின் விசேட நிகழ்வுகள் யாவற்றிற்கும் முகாமைத்துவக் குழு சிறந்த ஒத்துழைப்பு நல்கியது. தொடர்ந்தும் இந்நிறுவனத்தின் எதிர்காலம் பிரகாசிக்க மிகச்சிறந்த ஆலோசனைகளையும் ஒத்துழைப்பையும் நல்குவார்களென என நம்புகிறேன்.

## இணைப்பாட விதான செயற்பாடுகளுக்காக எமது பாடசாலையில் இயங்கும் கழகங்கள், மன்றங்கள், படைப்பிரிவுகள், சேவைப்பிரிவுகள்

1. மாணவர் முதல்வர் சபை
2. உயர்தர மாணவர் ஒன்றியம்
3. தமிழ் மன்றம்
4. ஆங்கில மன்றம்
5. இந்து மன்றம்
6. கிறிஸ்தவ மன்றம்
7. விஞ்ஞான மன்றம்
8. வர்த்தக மன்றம்
9. கலை மன்றம்
10. கவின் கலை மன்றம்
    1. நடனம்
    2. இசை
    3. சித்திரம்
11. நூலக மன்றம்
12. சுகாதார மன்றம்
13. புகைப்பட கலை மன்றம்
14. தகவல் தொழில்நுட்ப மன்றம்
15. 6-11 விஞ்ஞான மன்றம்

16. 6-11 வர்த்தக மன்றம்

17. 6-11 சமூகக்கல்வி மன்றம்

18. 6-11 மனையும் மங்கையும்

19. Scrabble Club

20. தேசிய இளைஞர் மன்றம்

21. பொது அறிவு மன்றம்

22. விவாத மன்றம்

23. 6-11 தமிழ் மன்றம்

24. 6-11 ஆங்கில மன்றம்

25. பெண் சாரணியம்

26 இன்ரறக்ற் கழகம்

27 சதுரங்கக் கழகம்

28. லியோக் கழகம்

29. இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்

30. கூட்டுறவுச் சங்கம்

31. சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவு

32. மாணவர் நலன்புரிச் சங்க படைப்பிரிவு

33. ஒழுக்காற்றுச் சபை

34. சுற்றாடல் முன்னோடிச் சபை

35 இளம் புத்தாக்குனர் கழகம்

## எமது மாணவர்களின் சாதனைகள்

1) க.பொ.த (சா.த) பரீட்சை-2008 ல் திறமையாகச் சித்தியடைந்து 2009-2011 கல்வியாண்டிற்கான டயலொக் திறமைப் புலமைப்பரிசில் பெற்ற மாணவர்கள்.

1. வாகினி நித்தியானந்தன்
2. ஆரணி பாலசுந்தரம்
3. அர்ச்சனா ஆனந்தராஜா
4. டினோஜா சற்குணராஜா

2) மகாத்மா காந்தி புலமைப்பரிசில் வழங்கல் 2009 ல் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள்.

| | மாணவர் பெயர் | மாவட்ட மட்ட நிலை |
|---|---|---|
| 1. | வாகினி நித்தியானந்தன் | 01 |
| 2. | ஆரணி பாலசுந்தரம் | 02 |
| 3. | அர்ச்சனா ஆனந்தராஜா | 04 |
| 4. | டினோஜா சற்குணராஜா | 08 |
| 5. | மோசிதா பாஸ்கரமகாராஜா | 11 |
| 6. | அபிராமி அமிர்தலிங்கம் | 19 |
| 7. | லக்ஷி கணேஸ | 23 |
| 8. | கஸ்தூரி சிவரஞ்சன் | 25 |
| 9. | ஹஸ்தனி இராஜேந்திரம் | 28 |
| 10. | நிருபிகா குமாரவேல் | 28 |
| 11. | பவித்திரா செல்வநாதன் | 34 |
| 12. | தனுஷியா குலரட்ணசிங்கம் | 34 |
| 13. | தரணியா சுகுமார் | 34 |
| 14. | கீர்த்திகா தயாபரன் | 40 |
| 15. | நிஷாந்தி குணநாதன் | 42 |
| 16. | சுபகா ஆனந்தமயில் | 47 |

தமிழ் மற்றும் கவின்கலை மன்றம் ஆகியவற்றின் செயற்பாடுகளால் மாணவிகள், பேச்சு, கட்டுரை, கவிதை, சிறுகதை என பல்வேறு போட்டிகளிலும் தமிழ்த்தினப் போட்டிகளிலும் பங்குபற்றி கோட்ட, வலய, மாவட்ட, நிலைகளில் பல பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்டனர்.

தேசிய மட்டத்தில்

1. பிரியவதனி ஜெயபாலன் பிரிவு 4 1ம் இடம் - தனிநடனம்

2. பாவனா சிவயேபகன் பிரிவு 3 1ம் இடம் - தனிநடனம்

ஆகியோர் தங்கப்பதக்கம் பெற்றுக்கொண்டனர்.

3. கதிர்தர்சினி பரமேஸ்வரன் பிரிவு 2 2ம் இடம் கட்டுரை-

4. லோஜனா கணபதிப்பிள்ளை பிரிவு 5 2ம் இடம் - பேச்சு

5. சபார்த்தனி சிவபாலன் பிரிவு 2 2ம் இடம் - பாவோதல்

(ஏனைய தமிழ்தின முடிவுகள் இவ்வறிக்கையின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது.)

அகில இலங்கை ரீதியில் HNB யின் அனுசரனையுடன் கல்வி அமைச்சினால் பாடசாலைகளிடையே நடாத்தப்பட்ட கவிதை, பேச்சு, பாட்டு, கட்டுரைப் போட்டிகளில் எமது மாணவர்கள் பங்குபற்றி பல்வேறு நிலைகளைப் பெற்றுக்கொண்டனர்.

ச. நிருத்திகா 1ம் இடம் - கட்டுரை

த. தசதங்கினி 3ம் இடம் - பாட்டு

ச. நிருத்திகா 4ம் இடம் - கட்டுரை

ந. கிரிஷானி 5ம் இடம் - சிறுகதை

ச. சுமித்திரா 6ம் இடம் - கட்டுரை

மாவட்டரீதியில் பிரதேச செயலாளர் (யாழ்) பிரிவினால் நடாத்தப்பட்ட கலை இலக்கியப் போட்டியில்

கட்டுரை ஆக்கம்

ரூபினி சுந்தரலிங்கம் சிரேஷ்ட பிரிவு 2ம் இடம்

தேனுசா செல்வரட்ணம் கனிஷ்ட பிரிவு 2ம் இடம்

கவிதை ஆக்கம்

சாமினினி விவேகானந்தன் சிரேஷ்ட பிரிவு 2ம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

பிரதேச செயலகத்தால் மாவட்டரீதியில் நடாத்தப்பட்ட சிறுவர் தினப் போட்டிகளில் மாணவிகள் பரிசில்கள் பெற்றனர்.

மேற்பிரிவு – பேச்சு – லோஜனா கணபதிப்பிள்ளை 1ம் இடம்

ஐசிந்தா பாலசுப்பிரமணியம் 1ம் இடம்

மத்திய பிரிவு கவிதை – மகிழினி சின்னத்தம்பி 3ம் இடம்

மாகாண மட்டம்

நாட்டிய நாடகம் - 2ம் இடம் -

மாவட்ட மட்டம்

இசை நாடகம் - 2ம் இடம்

6-13வரையிலான மாணவர்களை உள்ளடக்கியதாக விஞ்ஞான மன்றம் செயற்படுகின்றது. பிரதி வெள்ளிக்கிழமை தோறும் கூடும் இம் மன்றம் மாணவரிடையே அறிவியல் விஞ்ஞானம் சார்ந்த புதிய கருத்துக்களையும் நிகழ்கால பதிவுகளையும் அறிமுகப்படுத்தி வருகின்றது. வருடந்தோறும் இம் மன்றத்தின் உயர்தர வகுப்பு மாணவர்களால் ( 12–13 ) 'அரும்பு' எனும் சஞ்சிகை வெளியிடப்பட்டு வருகிறது. பாடசாலை, கோட்ட, வலய, மாவட்ட மற்றும் மாகாணமட்ட ரீதியில் நடைபெறும் விஞ்ஞான – வினாடிவினா, போட்டிகள், கண்காட்சிப் போட்டிகளிற்கு மாணவர்களைத் தயார்ப்படுத்தும் செயற்பாட்டிலும் இம்மன்றம் ஈடுபட்டு வருகிறது

அதனைவிட ஏனைய பொது நிறுவனங்களால் நடாத்தப்படும் மேற்படி போட்டிகளிலும் எமது மாணவிகள் பங்குபற்றுவது குறிப்பிடத்தக்கது.வேம்படி – மத்தியகல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர் சங்கங்களின் ஏற்பாட்டினால் இரண்டு பாடசாலைகளிற்கிடையே வருடந்தோறும் நடைபெற்று வரும் வினாடி – வினா போட்டியில் 2008 இல் எமது மாணவிகள் வெற்றிக் கேடயத்தைப் பெற்றுக் கொண்டனர். யாழ் கல்வி வலயத்தால் நடாத்தப்பட்ட கண்காட்சிப் போட்டியில் உயிரியல், இரசாயனவியல் ஆகிய பிரிவுகளிலும் எமது மாணவர்களின் காட்சிப் பொருட்களை முன்வைத்து முறையே 2ம்,3ம் இடங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்து மன்றமானது மாணவர்களின் ஆன்மீக சிந்தனைகளை வளர்க்கும் நோக்கில் கருத்தரங்குகள், சமயச்சொற்பொழிவுகள் ஆகியவற்றை ஏற்பாடு செய்து வருவதுடன் பொதுநிறுவனங்களால் நடாத்தப்படும் பரீட்சைகள், போட்டிகள் ஆகியவற்றிற்கு மாணவர்களை தயார்படுத்தியும் வருகின்றது. யாழ் மாநகராட்சி மன்றத்தால் நடாத்தப்பட்ட சமயஅறிவுப் பரீட்சையில் எமது மாணவிகள் (6 – 12) சகல தரங்களிலும் அதிவிசேட, விசேட சித்திகளைப்

பெற்றுள்ளனர். இதனை விட யாழ் வலயத்தால் நடாத்தப்பட்ட சைவநெறிப் போட்டியில் பேச்சு , பண்ணிசை,சகலகலாவல்லி மாலை கட்டுதல் ஆகியவற்றில் எமது மாணவிகள் 1ம் இடம் உட்பட பல்வேறுநிலைகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது

சித்திர மன்றச் செயற்பாட்டினால் கோட்ட , வலய மட்ட சித்திரப் போட்டியில் எமது மாணவிகள் பங்குபற்றினர்.

கலைஒளி மன்றத்தால் மாவட்டரீதியில் நடாத்தப்பட்ட ஓவியப் போட்டியில் கு. நிஷானா , தி. அருள்வாகினி ஆகியோர் ஆறுதல் பரிசில்களைப் பெற்றுக் கொண்டனர். இதே நிறுவனத்தால் நடாத்தப்பட்ட போட்டியில் எமது மாணவிகள் சான்றிதழ்களையும் பெற்றுக்கொண்டனர்.

வலயக் கல்வி அலுவலகத்தால் நடாத்தப்பட்ட அழகியற் கண்காட்சியில் எமது பாடசாலை சார்பில் மாணவிகள் பங்குபற்றி சங்கீத வாத்தியக் கருவிகள், நடராஜர் ஆடற்கலை ஆகிய தலைப்புக்களில் காட்சிப் பொருட்களை முன்வைத்து சான்றிதழ்களைப் பெற்றக் கொண்டனர்

கிறிஸ்தவ மன்றச் செயற்பாட்டால் வருடந்தோறும் ஒளிவிழாசிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. யாழ் மறை மாவட்ட கத்தோலிக்க திருமறைக் கல்வித் தேர்வில் நிக்கலின் ஸ்ரனிஷா.அ (தரம்6) , மோனிசா ஏஞ்சலின்.றொ ( தரம் 8 )ஆகியோர் தங்கப்பதக்கங்களைப் பெற்றுக் கொண்டனர். இதைவிட எமது மாணவர்கள் 2ம் ,3ம் இடங்களைப் பெற்று கேடயங்களையும் பெற்றுக் கொண்டனர்.

நூலக மன்றமானது பல்வேறு மாதாந்த செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதனூடாக வாசிப்பில் அனைவரையும் ஈடுபடுத்தி வருகிறது.நூலக வாரத்தையெட்டி நூலக விழிப்புணர்வு நிறுவனத்தால் நடத்தப்பட்ட கட்டுரை , பேச்சு மற்றும் பொது அறிவுப்போட்டிகளில் பங்குபற்றி எமது மாணவிகள் பல நிலைகளைப் பெற்றுக்கொண்டனர்.

கட்டுரை :- கீழ்பிரிவு – பவித்திரா.தே 2ம் இடம்

கட்டுரை :- மேற்பிரிவு – யாழினி.செ 2ம் இடம்

பேச்சு :- மேற்பிரிவு – காயத்ரி.சி 1ம் இடம்

பொதுஅறிவு :- யுலக்ஷினி.கி 1ம் இடம்

யாழ் வலயத்தால் நடாத்தப்பட்ட மென் பொருள் ஆக்கப் போட்டியில் தேனுகா.ப பங்குபற்றி சான்றிதழ் பெற்றார்.

வர்த்தக மன்றமானது பிரதி வெள்ளிக்கிழமை தோறும் ஒன்று கூடி கவிதை கட்டுரை வினாவிடை விவாதம் பொதுஅறிவு போன்ற செயற்பாடுகளால் மாணவர்களின் திறமையை விருத்தி செய்கின்றது. உயர்தர வகுப்பு 2009 வர்த்தகப் பிரிவு மற்றும் 2010 வர்த்தகப் பிரிவு மாணவர்கள் இணைந்து மாணவர்களின் திறன்களையும் ஆற்றல்களையும் வெளிக்கொண்டு வரும் வகையில் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். மாணவர்களின் தனிப்பட்ட திறன்களை வெளிப்படுத்த இம் மன்றம் ஒரு ஊக்குவிப்பாக அமைகின்றது.

இம்மன்றத்தினால் வெளியீடு செய்யப்படும் 'வர்த்தகி' சஞ்சிகை மூலம் பெறப்பட்ட மேலதிக நிதியையும் சிற்றுண்டி விற்பனை மூலம் பெற்றுக்கொள்ளப்படும் நிதியையும் பயன்படுத்தி 81700 ரூபா செலவில் வர்த்தக மண்டபம் திருத்த வேலைகள், வர்ணப்பூச்சு என்பன மேற்கொள்ளப்பட்டதுடன் பூச்சாடிகள் கொள்வனவு செய்யப்பட்டு அழகுபடுத்தப்பட்டது மாணவர்களின் வாசிப்பு ஆற்றலையும் பொது அறிவையும் மேம்படுத்தும் பொருட்டு வீரகேசரிவாரமலர் கொள்வனவு செய்யப்பட்டு மாணவர்களுக்கு வாசிப்பதற்காக வாழங்கப்படுக்ன்றது.

பொதுஅறிவு மன்றம் மாணவரின் அறிவை மேம்படுத்தும் விதத்தில் பொதுஅறிவு சோதனைகளை வகுப்பு ரீதியாக நடத்தி வருகின்றது. கூடிய புள்ளி பெறும் மாணவருக்கு பரிசில்கள் வழங்கி ஊக்குவிக்கப்படுகின்றது. ஓவ்வொரு திங்கட்கிழமையும் காலைப் பிராத்தனைக் கூட்டத்தில் 5 கேள்விகள் கேட்கப்பட்டு சரியாக விடையளிப்பவர்களுக்கு சிறுபரிசில்கள் வழங்கப்படுகின்றது. இந்நிகழ்ச்சியை உயர்தர வகுப்பு மாணவர்கள் கிரமமாக நடாத்தி வருகிறார்க்ள். 2008ம் ஆண்டில் யாழ்மாவட்ட மனித உரிமைகள்ஆணையத்தால் நடாத்தப்பட்ட ( PAFRAL ) பொது அறிவுப் போட்டியில் மாவட்டரீதியில் எமது மாணவர்கள் 2ம் இடத்தைப் பெற்றுக் கொண்டனர். இவ்வணியில் சுவர்ணா.பு, லக்ஷிகா.சு,ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

சாரணியக் கழகத்தால் மூன்று நாட்களிற்கு பாடசாலை மட்டப் பாசறை நடாத்தப்பட்டது. இதில் யாழ் வலயப் பாடசாலைகளின் சாரணியர்கள் கலந்து கொண்டனர்.

இன்ரறக்ட் கழகமும் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவு மாணவர்களும் பாடசாலையின் விளையாட்டு நிகழ்வு உட்பட தேவைப்படும் சந்தர்ப்பங்களில் முதலுதவி வழங்குகின்றனர். இச் சேவை மாணவர்களை பல ஆபத்துக்களிலுமிருந்து பாதுகாத்துள்ளது. இன்ரறக்ட் கழக உறுப்பினர்கள் யாழ் போதனா வைத்தியசாலையின் . இரத்த வங்கிக்கு இரத்ததானம் வழங்கியதுடன் வலுவிழந்தோர் புனர்வாழ்வுக்காக கொடி வாரத்தில் நிதி சேகரித்து வழங்கும். செயற்பாட்டிலும் ஈடுபட்டனர். இதைவிட தியாகி அறக்கொடை நிலையத்தில் வாழும் 20 மாணவர்களிற்கு பொருளுதவியும் செய்யப்பட்டது. இன்ரறக்ட் கழக மாணவர்களால் பாடசாலை வீதி ஒழுங்கும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

பாடசாலையின் சகல மாணவர்களும் பாடசாலை கூட்டுறவச்சங்கத்தின் உறுப்பினராவர். மாணவர்களின் நலன்கருதி போட்டோ பிரதி இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டு மலிவு விலையில் மாணவர்களுக்கு பிரதிகள் எடுத்துக் கொடுக்கப்படுகிறது.

பாடசாலையில் நடைபெறும் நிகழ்வுகளை நிழற்படங்களாகவும் இறுவட்டிலும் பதித்து விநியோகித்து வரும் செயற்பாட்டில் புகைப்பட மன்றம் ஈடுபடுகின்றது.

மாணவர்களின் பல்துறைசார் திறன்னளையும் படைப்புத்திறன்களையும் ஊக்குவிப்பதுடன் பொது அறிவை வளர்ப்பதையும் நோக்காகக் கொண்டு சமூகக்கல்வி மன்றம் செயறப்பட்டு வருகின்றது. சுற்றாடல் கழகத்துடன் இணைந்து சூழல்தினத்தையும் வருடாவருடம் சிறப்பாக கொண்டாடி வருகிறது.

**விளையாட்டுத்துறை**

எமது மாணவர்கள் பல்வேறு போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்றுள்ளனர்.

மாவட்ட மட்டத்தில் பெறப்பட்ட வெற்றிகள்

1. 19 வயதிற்கு கீழ் - சதுரங்க அணி – 2ம் இடம்
2. 19 வயதிற்கு கீழ் - Scrabble Team – 2ம் இடம்
3. 19 வயதிற்கு கீழ் - உடற்பயிற்சி – 2ம் இடம்
   உடற்பயிற்சி அணித்தலைவர் – வைஸ்ணவி நவரட்ணராஜா

**வலயமட்டத்தில் பெறப்பட்ட வெற்றிகள்**

1. 15 வயதிற்கு கீழ் - வலைப்பந்தாட்ட அணி – 1ம் இடம்
2. 19 வயதிற்கு கீழ் - மேசைப்பந்தாட்ட அணி – 2ம் இடம்
3. 17 வயதிற்கு கீழ் - கூடைப்பந்தாட்ட அணி – 2ம் இடம்

ஆங்கில மன்றமானது மாணவரிடையே ஆங்கில மொழியாற்றல் பேச்சுத் திறன் ஆகியவற்றை வளர்த்தெடுக்கும் நோக்கில் தமது செயற்பாடுகளை வழி நடாத்தி வருகின்றது. மாவட்ட மட்ட ரீதியில் நடைபெற்ற போட்டிகளிலும் எமது மாணவர்கள் பல வெற்றிகளைப் பெற்றுள்ளனர்.

**மாகாண மட்டம்**

**Dictation**

தரம்

8 – சோ.திரம்பகி – 3ம் இடம்

12 – வா.நிஷாந்திகா – 2ம் இடம்

13 – மு.அறிவரசி - 3ம் இடம்

**Copy writing**

தரம்

13 – ச.சாமளை - 1ம் இடம்

**Creative writing**

தரம்

12 – வா.நிஷாந்திகா – 1ம் இடம்

13 – சே.சரண்யா - 2ம் இடம்

13 – மு.அறிவரசி - 3ம் இடம்

**எமது பாடசாலை மாணவர்களின் நலன்கருதி நடாத்தப்படும் சேவைகள்**

**வங்கிச்சேவை**

மாணவரின் சேமிப்புப்பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்குடன் ஹற்றன் நஷனல் வங்கி, மக்கள் வங்கி, இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கிகளில் வைப்பு வைப்பதற்கு குறிப்பிட்ட வங்கி ஊழியர்கள் பாடசாலைக்கு வந்து நேரடியாக மாணவரிடம் பணத்தை வங்கிகளில் சேர்க்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் உயர்தர மாணவர்கள் அவ்வங்கி உத்தியோகத்தர்களுடன் இணைந்து ஒரு வங்கியின் நடைமுறைகளைக் கற்கவும் வாய்ப்பளிக்கப்படுகின்றது.

***புலமைப் பரிசில் கொடுப்பனவு***

தரம் 5 புலமைப்பரிசிலில் சித்தியடைந்த மாணவர்களின் புலமைப் பரிசில் உரிய காலத்தில் கிடைக்க அவர்களின் வரவு விபரம் ஒழுங்காக காலக்கிரமத்தில் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டு பணம் பெறப்பட்டு மாணவர்களுக்கு கொடுக்கப்படுகின்றது. அத்துடன் மாணவரின் பெற்றோரின் விருப்புக்கேற்ப அவர்கள் விரும்பும் வங்கியில் இப்பணம் வைப்பில் இடப்படுகிறது.

***தேசிய அடையாள அட்டை,தபால் திணைக்கள அடையாள அட்டை,பாடசாலை அடையாள அட்டை***

தரம் 6ல் சேரும் மாணவர்களுக்கு பாடசாலை அடையாள அட்டைகளும் தரம் 10ல் தபால் திணைக்கள அடையாள அட்டைகளும் தரம் 11ல் தேசிய அடையாள அட்டைகளும் உரிய காலத்தில் பெற்றுக்கொடுக்கப்படுகின்றன.

**போக்குவரத்து பருவகாலச் சீட்டுக்கள்**

ஒவ்வொரு வகுப்பு மாணவரிடமிருந்தும் உரிய காலத்தில் பணம் சேகரிக்கப்பட்டு கோண்டாவில் போக்குவரத்து சபைக்கு அனுப்பப்பட்டு பருவக்காலச்சீட்டுக்கள் பெற்றுக்கொடுக்கப்படுகின்றன.

***வீதிப்போக்குவரத்து***

வாகன விபத்துக்கள் ஏற்படாமல் மாணவர் பாடசாலைக்கு வரும் போது வீதியைக் கவனமாகக் கடந்து வர நலன்புரிச் சங்க படைப்பிரிவு மாணவர்கள் வீதிப்போக்குவரத்து பொலீஸாருடன் இணைந்து கடமை புரிகிறார்கள். அத்துடன் வீதிப்போக்குவரத்து விதிகள் பேணப்படவேண்டுமென மாணவர் ஒன்றுகூடும் நேரங்களிலும் அறிவிப்புக்கள் வலியுறுத்தப்படுகின்றன.

M_139

**வறிய மாணவர்களுக்கு உதவி**

நலன் விரும்பி ஒருவரால் பாடசாலைக்கு வழங்கப்பட்ட நிலையான வைப்பிலிடப்பட்டு ஒவ்வொரு வருடமும் வாணி விழா கொண்டாட்டத்தின் போது வசதி குறைந்த குடும்பத்தைச் சேர்ந்த நன்கு படிக்கும் 20 மாணவர்களுக்கு தலா 3000\= பணம் வழங்கப்படுகிறது. அத்துடன் பாடசாலைக் கழகங்களும் தமது சின்னம் சூட்டும் வைபவத்தின் போது சில வசதி குறைந்த மாணவர்களை இனங்கண்டு கற்றல் உபகரணம் வழங்கி உதவிபுரிகின்றன.

**வழிகாட்டல் ஆலோசனைச் சேவை**

எமது பாடசாலையில் கல்வி அமைச்சின் விதந்துரைப்பின் படி வழிகாட்டல் ஆலோசனை சேவைக்கென ஓர் ஆசிரியர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இன்றைய காலகட்டத்தில் குடும்பங்களின் சீரழிவு, குடும்ப பொருளாதாரநிலை , நாட்டில் நடைபெறும் வன்முறைகளால் ஏற்படும் பாதிப்பு , இயற்கை அனர்த்தங்கள், என்பவை காரணமாக மாணவர் பல்வேறு விதமான உள நெருக்கடிகளுக்கு உள்ளாகிறார்கள். இந்த உள நெருக்கடிகளுடன் பாடசாலைக்கு வரும் பிள்ளைகள் தமது உள நெருக்கடிகளை வகுப்பறைகளிலும், பாடசாலையிலும் தமது நடத்தை மூலம் வெளிப்படுத்துகின்றனர். இவர்கள் கற்றலில் ஈடுபடுவதும், குறைவாகவுள்ள நிலையில் வகுப்பாசிரியர்கள் பாடஆசிரியர்களால் இனங்காணப்பட்ட இவர்களது பிரச்சனைகளை வழிகாட்டல் ஆலோசனை சேவை ஆசிரியர் அறிந்து அவர்களுக்கு தேவையான ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்கி வகுப்பறையில் ஏனையமாணவர்களுடன் சேர்ந்து மகிழ்ச்சியாகக் கற்பதற்கான உதவியை செய்வார். பாடசாலையை அவர்களுக்கு மகிழ்ச்சியான இடமாக மாற்றும் முயற்சியில் ஈடுபடுவார்.


# நன்றி நவிலல்

எங்கள் அழைப்பை முழுமனதுடன் ஏற்று இக்கல்லூரியில் பரிசளிப்புத்தினமாகிய இந்நாளில் வருகை தந்து சிறப்பித்து எம்மை மகிழ வைத்து இனிய உரையாற்றி எமது மாணவச் செல்வங்களுக்கு பரிசில் வழங்கி கௌரவித்த எமது முன்னைநாள் பிரதி அதிபர் திருமதி.சந்திராதேவி சொக்கலிங்கம் அவர்களுக்கு எனது தனிப்பட்டதும் பாடசாலை சமூகத்தின் சார்பிலுமான இதயம் கனிந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

எமது அழைப்பை ஏற்று இங்கு வருகை தந்து ஆசியுரை வழங்கிய வணக்கத்திற்குரிய திரு.எஸ்.கதிர்காமர் அவர்களுக்கும் நிறுவுனர் உரை வழங்கிய எமது முன்னைநாள் அதிபர் செல்வி.இ.இராசட்ணம் அவர்களுக்கும் எமது நன்றிகள்

தமது சிறார்களின் வளர்ச்சியில் அதிக அக்கறை கொண்ட பெற்றோர் பலர் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்து வருகின்றனர். இவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மீண்டும் அனைவருக்கும் நன்றி கூறி எனது அறிக்கையை நிறைவு செய்கின்றேன்.



புதிய மஹாத்மா பிறின்டேர்ஸ், 40, இந்து மகளிர் வீதி, கந்தர்மடம்